இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 39 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 02 – வியாழக்கிழமை 18 செப்டம்பர் 2025 – திருச்சி ★ ★ 12 + 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 39: Thiruvalluvar Year - 2056 - Purataasi 02 - Thursday 18 September 2025 - Trichy ★★ 12+10 Pages ₹5.00


## முப்பெரும் விழா விருதுகள் – முரசொலி அறக்கட்டளை விருது வழங்கப்பட்டன!

# கரூரில் தி.மு.க. முப்பெரும் விழா!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கிப் பேருரையாற்றினார்!

**கரூர், செப். 18 -**

**தி.மு.க. முப்பெரும் விழா நேற்று கரூரில் சிறப்புடன் நடைபெற்றது. இவ்விழாவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தி.மு.க. முப்பெரும் விழா - 2025 விருதுகள், முரசொலி அறக்கட்டளை விருதினையும் வழங்கி சிறப்புரை யாற்றினார்.**

**தி.மு.க. முப்பெரும் விழாவை யொட்டி கரூர் மாநகரமே நேற்று விழாக்கோலம் பூண்டிருந்தது.**




தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், திராவிட முன்னேற்றக் கழகம் தொடங் கப்பட்ட நாள் இம்மூன்றையும் இணைத்து தி.மு.க. முப்பெரும் விழாவாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு செப்டம்பர் மாதமும் பெருவிழா வாக நடத்தி வந்தார். முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு பிரிந்தாலும் அவரது அடி யொற்றி கழகத் தலைவர் முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தி.மு.க. முப்பெரும் விழாவை தொடர்ந்து நடத்தி வருகிறார்.

### வரலாற்றில் இடம் பெற்ற முப்பெரும் விழா!

அந்தவகையில் திராவிட இயக்க வரலாற்றில் - தி.மு.க. வரலாற்றில் முப்பெரும் விழா தனிச்சிறப்புப் பெற்றதாகும். இம் முப்பெரும் விழாவையொட்டி வழங்கப்படும் விருதுகள் ஒவ் வொரு கழகத்தினருக்கும் தனது உழைப்புக்கு கிடைத்த விருதா கவே பெருமைகொள்வர். அந்த வகையில் தி.மு.க. முப்பெரும் விழா 17.09.2025 அன்று கரூர் மாநகரில் நடைபெறும் என்று தலைமைக் கழகம் சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித் தார். அதேபோன்று கரூர் மாநக ரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் தி.மு.க. விருதுகள் பெறுவோரின் பெயர்களையும் தலைமைக் கழகம் - கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தார்.

கரூர் மாநகரில் முப்பெரும் விழா நடைபெறும் என்று கழகத் தலைவர் அவர்கள் அறிவித்ததி லிருந்தே கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச் சர் செந்தில் பாலாஜி விழாவிற்கான ஏற்பாடுகளை எழிலார்ந்த முறை யில் குறிப்பாக சொல்ல வேண்டு மென்றால் இம்முப்பெரும் விழா ஒரு மாநாடு போல் நடைபெறும் வகையில் கழக முன்னணி யினருடன் இணைந்து சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

இம்முப்பெரும் விழாவை யொட்டி கரூர் மாநகரமே நேற்று விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கு காணினும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகி யோரின் புகைப்படங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட் டிருந்ததுடன், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் உருவம் பதித்த பதாகை களும் ஆங்காங்கே அமைக்கப்பட் டிருந்தன. கரூர்மாந கரம் முழு வதும் கழகக் கொடிகள் பறந்த வண்ணம் காட்சியளித்தன.

நேற்று நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலந்து கொள்ள தமிழ கம் முழுவதும் இருந்து மட்டு மின்றி வெளி மாநிலத்திலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கழகத்தி னர் திராவிட இயக்க ஆர்வலர்கள் பொதுமக்கள் கரூரில் இலட்சக் கணக்கில் குவிந்தனர்.

### விழா நிகழ்ச்சி!

நேற்று (17.09.2025) மாலை 5 மணி அளவில் கரூர் மாவட்டம், கரூர் கோடங்கிபட்டி (கரூர் பை-பாஸ் சாலை) கலைஞர் திடலில் தி.மு.க. முப்பெரும் விழா 2025 நடைபெற்றது.

இவ்விழாவில் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாவிற்கு கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரை முருகன் அவர்கள் தலைமை வகித்து, சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை - கழக விருதிற்காக தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றி யம், நகரம், பகுதி, பேரூர் ஆகிய வற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற் சான்று, பணமுடிப்பு ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் வழங்கி சிறப்பித்தார்.

### கழக முப்பெரும் விழா விருதுகள்!

இவ்விழாவில் கழகத் தலை வர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத்தின் முப்பெரும் விழா விருதுகளை முறையே;

**பெரியார் விருது**, கழக துணைப் பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கும்,

**அண்ணா விருது**, தணிக்கைக் குழு முன்னாள் உறுப்பினர், பாளையங்கோட்டை நகர் மன்ற முன்னாள் தலைவர் சுப.சீதா ராமன் அவர்களுக்கும்,

**கலைஞர் விருது**, நூற்றாண்டு கண்டவரும், அண்ணா நகர் பகுதி முன்னாள் செயலாளர், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் சோ.மா.ராமச்சந்திரன் அவர்களுக்கும்,

**பாவேந்தர் பாரதிதாசன் விருது**, கழக மூத்த முன்னோடி, தலை மைச் செயற்குழு உறுப்பினர் நினைவில் வாழும் குளித்தலை சிவராமன் அவரது குடும்பத் தாருக்கும்.

**பேராசிரியர் விருது**, கழக ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர். சட்டப்பேரவை முன்னாள் கொறடா மருதூர் ராமலிங்கம் அவர்களுக்கும்,

**மு.க.ஸ்டாலின் விருது**, ஒருங் கிணைந்த கோவை மாவட்ட முன்னாள் செயலாளர், முன்னாள் அமைச்சர், பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்களுக்கும் வழங்கினார்.

### முரசொலி அறக்கட்டளை சார்பில் முரசொலி செல்வம் விருது!

மேலும் இந்த ஆண்டு முதல் முரசொலி அறக்கட்டளை சார்பில் முரசொலி செல்வம் விருது ஒவ் வொரு ஆண்டும் வழங்கப்படும் என்று கழகத் தலைவர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, இந்த ஆண்டு முரசொலி அறக்கட்டளை சார்பில் **முரசொலி செல்வம் விருது** மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ். பன்னீர்செல்வன் அவர்களுக்கும் முதல்வர் அவர்கள் வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை கழக விருதுகளாக தமிழ்நாட்டில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற் றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற் சான்று, பணமுடிப்பு ஆகியவற்றை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

விருது மற்றும் பரிசு பெற்றவர் களை வாழ்த்தி கழகப் பொருளா ளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, திருச்சி என்.சிவா, ஆ.இராசா, கனிமொழி கருணா நிதி, அந்தியூர் ப.செல்வராஜ் ஆகியோர் பேசினர்.

விழாவின் நிறைவாக கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.

### கரூர் மாநகரமே விழாக்கோலம்!

இவ்விழாவில் தலைமைக் கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள், மாநில சார்பு அணி நிர்வாகிகள், கழக மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாந கர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் உள்பட தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் உள்ள கழகத்தி னர், வெளிநாடுகளில் உள்ள கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என்று இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

முப்பெரும் விழாவை முன் னிட்டு நேற்று கரூர் மாநகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

---

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.9.2025) விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் அமைச்சரு மான எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்களின் 108வது பிறந்தநாளையொட்டி சென்னை, கிண்டியில் அமைந்துள்ள இராமசாமி படையாட்சியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மா.சுப்பிர மணியன், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகத்ரட்ச கன், தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, எஸ்.எஸ்.பாலாஜி, அரவிந்த் ரமேஷ், கே. கணபதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், எம்.கிருஷ்ணசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜா ராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், இராமசாமி படையாட்சியார் வாழப்பாடி பேரவை தலைவர் சைதை வி.தேவதாஸ், வன்னியர் கூட்டமைப்பின் நிருவாகி சி.ஆர். பாஸ்கரன், இராமசாமி படையாட்சியார் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



---

## தந்தை பெரியார் என்றும் எங்கும் நிலைத்திருப்பார்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, செப். 18 -**

**தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளான நேற்று, (17.9.2025) முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில்,**

**“தந்தை பெரியார் என்றும் எங்கும் நிலைத்திருப்பார்!” எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.**



தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**தந்தை பெரியார் இனப்பகையைச் சுட்டெ ரிக்கும் பெருநெருப்பு!**

**தமிழினத்தின் எழுச்சிக்கான பகுத்த றிவுப் பேரொளி!**

**தந்தை பெரியார் என்றும் எங் கும் நிலைத்திருப்பார்!**

இவ்வாறு அப்பதிவில் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் குறிப்பிட்டுள்ளார்.